
## அந்நிய பாஷையில் பேசுவது

# அவசியமா ?



# Is it necessary to speak in tongues?

சகோ. மோகன் சி. லாசரஸ்

# அந்நிய பாஷையில் பேசுவது அவசியமா?

அந்நிய பாஷையில் பேசுவது அவசியமா?

முதல் பதிப்பு : டிசம்பர் 2008
பிரதிகள் : 25,000
ஆசிரியர் : சகோ. மோகன் சி. லாசரஸ்.

## பொருளடக்கம்!


1. அந்நிய பாஷையில் பேசுவது அவசியமா?
2. பரிசுத்த ஆவியானவரும், அந்நிய பாஷையும்!
3. அந்நிய பாஷையில் பேசுகிறவன் தேவனோடு பேசுகிறான்!
4. அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்தி விருத்தி உண்டாகப் பேசுகிறான்!
5. அந்நிய பாஷை பேசுகிறவன் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம் பண்ணக்கடவன்!
6. அந்நிய பாஷையில் மன்றாடும் ஆவியானவர்!
7. அந்நிய பாஷையும், தீர்க்கதரிசனமும்!

# அந்நிய பாஷையில் பேசுவது அவசியமா?

**இ**யேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனாகிய பரி. **பவுல்,** கொரிந்து பட்டணத்தில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட தேவப் பிள்ளைகளுக்கு எழுதும்போது, "தேவப் பிள்ளைகளாகிய, **நீங்களெல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்" (1 கொரி. 14:5)** என்று சொல்கிறார்.

தேவ மனிதனாகிய பரி. பவுல், தன் சொந்த விருப்பத்தை அப்படி எழுதவில்லை. **"வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப் பட்டிருக்கிறது." (2 தீமோ. 3:16)** என்ற வேத வசனத்தின்படி, பரி. பவுல் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, **தேவனுடைய விருப்பத்தை** விசுவாசி களுக்கு எழுதியிருக்கிறார் **(2 பேதுரு 1:21).**

நம்மை இரட்சித்த தேவனுடைய விருப்பம், **நாமெல்லோரும் பரிசுத்த ஆவியினால் நிறைந்து, அந்நிய பாஷைகளைப் பேச வேண்டும்** என்பதுதான்!

"இந்த அனுபவம் அன்றைக்கு இருந்த கொரிந்து சபை விசுவாசிகளுக்குத்தான்; நமக்கு அல்ல" என்று

சிலர் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். அப்படி அல்ல. அவசியமில்லாத ஒன்றை, ஆவியானவர் வேதத்தில் எழுதி வைத்திருக்க மாட்டார்.

ஆவிக்குரிய வரங்களைக் குறித்தும், அந்நிய பாஷையில் பேசி, தீர்க்கதரிசனம் சொல்வதைக் குறித்தும், இரண்டு அதிகாரங்களில் (1 கொரி. 12,14) ஆவியானவர் எழுதி வைத்திருப்பாரானால், இது தேவப் பிள்ளைகளுக்கு எத்தனை அவசியமான காரியம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்!

"அன்பே பெரியது, அன்பு இருந்தால் போதும், இந்த ஆவிக்குரிய அனுபவங்கள் அவசியமில்லை" என்று நினைக்கிறவர்கள் உண்டு. **அன்பில்லாமல் ஆவிக்குரிய அனுபவங்கள் இருந்து, ஒரு பிரயோஜனமுமில்லை.** அதே விதமாக, அன்பு எத்தனை முக்கியமோ; அப்படியே ஆவிக்குரிய அனுபவங்களும் நமக்கு மிகவும் அவசியம்.

ஆகவேதான், "அன்பை நாடுங்கள்;" என்று எழுதின ஆவியானவர், **"ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்." (1 கொரி. 14:1)** என்றும் எழுதி வைத்திருக்கிறார்.

இதே ஆவியானவர்தான், **"நீங்களெல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்." (1 கொரி. 14:5)** என்றும் சொல்கிறார்.

இந்த அந்நிய பாஷை என்றால் என்ன? இதனால் நமக்கு என்ன பிரயோஜனம்? என்பதை வேத வசனத்தின் மூலம் நாம் அறிந்து கொண்டால், இந்த அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள நம் உள்ளமும் வாஞ்சிக்கும்.

# பரிசுத்த ஆவியானவரும், அந்நிய பாஷையும்!

பெந்தெகோஸ்தே என்னும் நாளில் எருசலேமில் கூடியிருந்த இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் மீது, இயேசு கிறிஸ்து வாக்குக் கொடுத்தபடி, பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்டார்.

**"அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்." (அப். 2:4)**

பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்ட அந்த நாளிலேதான் திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டது. ஆகவே, அந்த நாளில் ஆவியானவர் வித்தியாசமான முறையில் செயல்பட்டதைப் பார்க்கிறோம்.

அன்று, அங்கு கூடி வந்திருந்த ஜனங்களின் பாஷைகளில் அவர்கள் பேசினார்கள். இன்றும் இப்படி ஆவியானவர் கிரியை செய்வதைக் காணலாம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், ஒரு பாரம்பரிய சபையின் போதகர் ஒருவர், தன் வாழ்க்கையில் நடந்த ஒரு அனுபவத்தை எனக்குக் கூறினார்:

அவருடைய கிராமத்தில் ஒரு பெந்தெகோஸ்தே சபையில் கன்வென்ஷன் கூட்டம் நடைபெற்றது. இவரும், இராணுவத்தில் வேலை பார்க்கும் இவரது நண்பரும் வேடிக்கை பார்க்க அந்தக் கூட்டத்திற்குச் சென்றார்கள். அங்கே தேவபிள்ளைகள் பரிசுத்த ஆவியினால் நிறைந்து, அந்நிய பாஷைகளைப் பேசி, தேவனைத் துதித்துக் கொண்டிருந்தார்கள்.

இராணுவத்திலிருந்து வந்திருந்த நண்பர், அதையெல்லாம் பார்த்து பரிகாசம் பண்ணிக் கொண்டிருந்தார். திடீரென்று அந்தக் கூட்டத்திலிருந்த ஒரு தாயார் சத்தமாக அந்நிய பாஷை பேசினார்கள்.

உடனே இராணுவத்திலிருந்து வந்திருந்த அந்த நண்பரின் முகம் வேறுபட்டது. ஒரு பயமும், திகிலும் காணப்பட்டது. அப்படியே முழங்கால்படியிட்டு ஜெபிக்க ஆரம்பித்தார். அந்தப் போதகருக்கு ஒன்றும் விளங்கவில்லை. "திடீரென்று இவருக்கு என்ன சம்பவித்தது?" என்று ஆச்சரியப்பட்டார். கூட்டம் முடிந்தபோது அந்த நண்பர், "படிப்பறிவில்லாத அந்தத் தாயாருக்கு தமிழே வாசிக்கத் தெரியாது.

ஆனால், அவர்கள் ஹிந்தி பாஷையை ஒரு தவறில்லாமல் பேசினார்கள். அதுவும், நான் இராணுவத்தில் இருந்தபோது செய்த ஒரு பாவத்தைக் குறித்துப் பேசினார்கள். ஆகவேதான், நான் நடுங்கிப் போனேன்" என்றார்.

"இந்த சம்பவத்திற்குப் பிறகுதான் நான் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளையும், அந்நிய பாஷை பேசும் அனுபவத்தையும் விசுவாசிக்க ஆரம்பித்தேன்" என்று அந்தப் போதகர் கூறினார்.

ஒரு இந்துக் குடும்பத்தில் பிறந்து, இயேசுவை அறிந்து கொண்ட ஒரு சகோதரி, தனக்கு ஏற்பட்ட ஒரு அனுபவத்தை இப்படியாக என்னிடத்தில் கூறினார்:

''இயேசுவை அறிந்து கொண்ட சமயத்தில் ஒருநாள், சில தேவப் பிள்ளைகளோடு சேர்ந்து ஜெபிக்கிற சமயத்தில், ஒரு தாயார் ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷையில் பேசினார்கள். அப்பொழுது இந்த அனுபவங்களெல்லாம் எனக்குத் தெரியாது. என் உள்ளத்தில் பல கேள்விகள் இருந்தது.

திடீரென்று அந்தத் தாயார் ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தார்கள். என் உள்ளத்தில் என்னென்ன கேள்விகள் இருந்ததோ; எல்லாவற்றிற்கும் அவர்கள் மூலமாக ஆவியானவர் எனக்குப் பதில் கொடுத்தார்.

இதில் ஆச்சரியம் என்னவென்றால், அந்தத் தாயாருக்கு தமிழே வாசிக்கத் தெரியாது. படிப்பறி வில்லாத அந்தத் தாயார், அழகான ஆங்கிலத்தில் பேசியது என்னை ஆச்சரியப்பட வைத்தது. அதன் பிறகு இன்னும் அதிகமாய் இயேசுவில் விசுவாசம் வைக்க ஆரம்பித்தேன்" என்றார்.

**பாருங்கள்! பெந்தெகோஸ்தே நாளில் கிரியை செய்ததைப்போல, இன்றும் ஆவியானவர் கிரியை செய்கிறார்.**

**'கொர்நேலியு' என்கிற, நூற்றுக்கு அதிபதியின் வீட்டார் இயேசுவை ஏற்றுக் கொண்டபோது, பரிசுத்த ஆவியானவர் அவர் மீது இறங்கினார். அப்பொழுது அவர்கள் மற்றவர்களுடைய பாஷையில் பேசவில்லை.**

**அவர்கள் பல பாஷைகளைப் பேசி, தேவனைப் புகழ்ந்தார்கள் (அப். 10:45). எபேசு பட்டணத்திற்குப் பவுல் வந்தபோது, சில தேவப் பிள்ளைகளைச் சந்திக்கிறார்.**

**பரிசுத்த ஆவியானவரைக் குறித்துக் கேள்விப் படாதிருந்த அவர்களுக்கு, பவுல் பரிசுத்த ஆவியான வரை அறிவித்து, ஜெபிக்கும்போது, ''பரிசுத்த ஆவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள்**

**அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்." (அப். 19:6)**

பாருங்கள்! இவர்களும் மற்றவர்களுடைய பாஷையில் பேசவில்லை, அந்நிய பாஷைகளைப் பேசினார்கள்.

பரிசுத்த ஆவியினால் நிறைந்து, அந்நிய பாஷைகளைப் பேசும்போது, பெந்தெகோஸ்தே நாளில் நடந்ததுபோல மற்றவர்களுக்குத் தெரிந்த பாஷையில் பேச வேண்டுமென்பதில்லை.

அந்நாளில் உலகமெங்கும் சுவிசேஷம் எடுத்துச் செல்வதற்கு ஏதுவாக, ஆவியானவர் அப்படி செயல்பட்டார். மற்றபடி பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்போது, யாரும் அறிந்திராத அந்நிய பாஷைகளைப் பேசி, தேவனில் களிகூரலாம்.

பரிசுத்த ஆவிக்குள் நிரம்பி, அந்நிய பாஷைகளைப் பேசுவது, அர்த்தமற்ற அனுபவமல்ல. அப்படியென்றால், **"நீங்களெல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்"** என்று, பவுல் அப்போஸ்தலன் எழுதியிருக்க மாட்டார்.

**"உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன், இதற்காக என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்." (1 கொரி. 14:18)** என்று, பரி. பவுல், தன் அனுபவத்தை எழுதியிருக்கிறார்.

**அந்நிய பாஷையில் விண்ணப்பம் பண்ணலாம்** (1 கொரி. 14:14), **அந்நிய பாஷையில் பாடலாம்** (1 கொரி. 14:15), **அந்நிய பாஷையில் ஸ்தோத்தரிக்கலாம்** (1 கொரி. 14:16), **அந்நிய பாஷைகளைப் பேசி தீர்க்கதரிசனம் சொல்லலாம்** (அப். 19:6). இந்த அனுபவங்களெல்லாம் பவுலுக்கு இருந்தது. ஆகவேதான் அவைகளைக் குறித்து எழுதியிருக்கிறார். இது, பவுல் அப்போஸ்தலனுடைய காலத்தோடு முடிந்து

போன அனுபவமல்ல. இன்றும் இந்த அனுபவத்தை நாம் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த அனுபவத்தைப் பெற்ற சிலர் தவறுகிறபடியினால், "இந்த ஆவிக்குரிய அனுபவம் சரியில்லை" என்று சொல்கிறவர்கள் உண்டு.

இரட்சிக்கப்பட்ட அனுபவத்தைப் பெற்ற சிலர், பின்வாங்கிப் போகிறார்கள். அதற்காக, "இரட்சிப்பின் அனுபவமே இல்லை'' என்பது, எவ்வளவு முட்டாள்தனமானது!

அப்படித்தான் இந்த ஆவிக்குரிய அனுபவத்திலும், ஆவியின் நிறைவைப் பெற்று, அந்நிய பாஷை பேசுகிற கோடிக்கணக்கான தேவப் பிள்ளைகள் உலகமெங்கிலும் ஆண்டவருக்குச் சாட்சியாக இருக்கிறார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, **நாம் இந்த அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்** என்று வேத வசனம் சொல்கிறது.

# அந்நிய பாஷையில் பேசுகிறவன் தேவனோடு பேசுகிறான்!

அந்நிய பாஷை பேசுகிறதினால் உண்டாகிற ஆசீர்வாதங்கள் என்ன?

**''...அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்." (1கொரி. 14:2)**

அந்நிய பாஷையில் பேசுகிறவன், தேவனிடத்தில் பேசுகிறான். அதாவது, தேவனிடத்தில் இரகசியம் பேசுகிறான். "அந்நிய பாஷை பேசினால், அதன் அர்த்தத்தைச் சொல்ல வேண்டும்" என்று, சிலர் சொல்வார்கள். அது அறியாமையினால் சொல்கிற காரியம்.

'இரகசியம்' என்றாலே, மற்றவர்களுக்குத் தெரியாமல் இரண்டு பேர் பேசிக் கொள்வதுதான் இரகசியம். மற்றவர்கள் புரிந்து கொள்வதுபோல் பேசுவது இரகசியமல்ல. ஒரு விசுவாசியும், ஆண்டவரும் இரகசியம் பேசுகிற அனுபவம்தான், அந்நிய பாஷையில் பேசுகிற அனுபவம்.

என்னோடு வேதாகமக் கல்லூரியில் படித்த ஆங்கிலோ–இந்திய வகுப்பைச் சார்ந்த ஒரு சகோதரர், எனக்கு நெருங்கிய நண்பர். ஒரு சமயம், அவருடைய வீட்டில் சில நாட்கள் தங்கியிருந்தேன். அவர்கள், தங்கள் வீட்டில் ஆங்கிலத்தில்தான் பேசிக் கொள்வார்கள். சில சமயங்களில் வித்தியாசமான ஒரு மொழியில் பேசுவதைக் கவனித்தேன். அது ஆங்கில உச்சரிப்பைப் போலிருக்கும்.

ஆனால், ஒன்றும் விளங்காது; ஒரு வார்த்தைகூட புரியாது. "இது என்ன பாஷை?" என்று என் நண்பரிடத்தில் கேட்டேன். அதற்கு அவர், "இது எங்கள் குடும்பத்தார் மாத்திரம் பேசக்கூடிய இரகசிய பாஷை. நாங்கள் மற்றவர்களுக்குத் தெரியாமல் எங்கள் குடும்பக் காரியங்களைப் பேசிக் கொள்ள நாங்கள் உருவாக்கிய பாஷை. ஆங்கில வார்த்தைகளோடு ஒரு சில எழுத்துக்களைச் சேர்த்துப் பேசுவோம். எங்களைத் தவிர, வேறு யாராலும் இதைப் புரிந்து கொள்ள முடியாது" என்றார்.

இப்படித்தான் **ஆண்டவரும், தன் பிள்ளைகள் தன்னோடு இரகசியம் பேசுவதற்காகக் கொடுத்த பாஷைதான் அந்நிய பாஷை** என்பது. **ஒரு தேவனுடைய பிள்ளை, பரிசுத்த ஆவியினால் நிறைந்து, அந்நிய பாஷையில் பேசும்போது, ஒருவரும் அதைப் புரிந்து கொள்ள முடியாது.**

**ஆனால், தேவன் அதைப் புரிந்து கொள்வார். ஏனென்றால், அவர்கள் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறார்கள்.**

**நீங்களும் தேவனோடு இரகசியம் பேச விரும்புகிறீர் களா? அந்நிய பாஷையில் பேசுகிற அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

# அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்தி விருத்தி உண்டாகப் பேசுகிறான்!

**"அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்தி விருத்தி உண்டாகப் பேசுகிறான்;" (1கொரி. 14:4)**

அந்நிய பாஷையில் பேசப் பேச, உங்களை அறியாமலேயே உங்கள் பக்தி விருத்தியடையும். நீங்கள் வெறும் பக்தியோடு இருந்தால் போதாது, உங்கள் **பக்தி விருத்தியடைய வேண்டும்** என்று ஆண்டவர் விரும்புகிறார். அதற்குத்தான் இந்த அனுபவத்தைக் கர்த்தர் நமக்குத் தருகிறார். வேதத்தில் சொல்லப்பட்ட மற்ற வரங்களெல்லாம் மற்றவர்களுடைய பிரயோஜனத்திற்காகத்தான்.

தீர்க்கதரிசனம்–சபையின் பக்தி விருத்திக்காக!

**(1கொரி. 14:4),**

குணமளிக்கும் வரம்–மற்றவர்களுடைய சுகத்திற்காக!

அற்புதங்களைச் செய்யும் சக்தி–மற்றவர்களுடைய நன்மைக்காக!

ஆவிகளைப் பகுத்தறிகிற வரம்–மற்றவர்களுடைய விடுதலைக்காக!

இப்படி எல்லா வரங்களும் மற்றவர்களுடைய பிரயோஜனத்திற்காக நமக்கு அருளப்பட்டிருக்கிறது.

ஆனால், **அந்நிய பாஷையில் பேசுவதுதான், பேசுகிற நம்முடைய பக்தி விருத்திக்காக அருளப்பட்டிருக்கிறது.**

ஆகவேதான், நாம் எல்லோரும் அந்நிய பாஷையில் பேச வேண்டுமென்று ஆண்டவர் சொல்கிறார்.

''அந்நிய பாஷையில் பேசாவிட்டால், பக்தி விருத்தியடையாதா?" என்று ஒரு கேள்வி எழும்பலாம்! நாம் பக்தியில் விருத்தியடைய பல வழிகள் இருக்கலாம். ஆனால், நம்முடைய பக்தி விருத்தியடைய ஆவியானவர் சொல்லியிருக்கிற காரியம், அந்நிய பாஷையில் பேசுவதுதான்.

என் சொந்த அனுபவத்தில் இதை நான் அனுபவிக்கிறேன். ஜெப நேரத்தில் பரிசுத்த ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷையில் பேசப் பேச, என் சோர்புகள் மாறி, என் ஆவியில் புது உற்சாகம் வருவதையும், ஆண்டவர் மீது அளவில்லாத அன்பு வருவதையும், என் பக்தி விருத்தியடைவதையும் உணர்கிறேன்.

"அன்புதான் ஒழிந்து போகாது; அந்நிய பாஷைகள் ஒழிந்து போகும்;

ஆகவே, அன்புதான் முக்கியம்; அந்நிய பாஷை ஒழிந்து விட்டது; இப்போது அந்நிய பாஷை கிடையாது" என்று; **1 கொரி. 13:8**ம் வசனத்தை சுட்டிக் காட்டுகிறவர்கள் உண்டு.

அன்புதான் பெரியது, **அன்பில்லாமல் எந்த வரம் இருந்தாலும் பிரயோஜனமில்லை** என்பதை யாரும் மறுக்க முடியாது. அதே சமயத்தில், **அந்நிய பாஷையும் முக்கியம்** என்பதை வேதம் கூறுகிறது.

"அந்நிய பாஷை ஒழிந்து விட்டது" என்பது, ஒரு தவறான புரிந்து கொள்ளுதல்.

"அந்நிய பாஷை ஒழிந்து விட்டது" என்று வேதத்தில் சொல்லப்படவில்லை. **"அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம்"** என்றுதான் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது **(1 கொரி. 13:8).**

இதனுடைய அர்த்தமென்ன?

ஒரு தேவனுடைய பிள்ளை, ஜெப நேரத்தில் சில மணி நேரங்கள் அந்நிய பாஷையில் பேசலாம்; 24 மணி நேரமும் பேசிக் கொண்டிருக்க முடியாது. பேசிப் பேசி, ஓய்ந்து போவார்கள்.

ஆனால், 24 மணி நேரமும் அன்பை வெளிப் படுத்த முடியும். இதைத்தான் ஆவியானவர் அப்படி எழுதி வைத்திருக்கிறார்.

ஆனால், இதை சிலர் தவறாக வியாக்கியானம் செய்து, "அந்நிய பாஷை ஒழிந்து விட்டது; இப்போது இல்லை" என்று தவறாகப் பிரசங்கிக்கிறார்கள்.

கர்த்தர் இவர்களை மன்னிப்பாராக!

**அந்நிய பாஷையில் பேசுகிறவன்
அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக
விண்ணப்பம் பண்ணக்கடவன்!**

**"...அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம் பண்ணக்கடவன்." (1கொரி. 14:13).**

**"உலகத்திலே எத்தனையோவிதமான பாஷைகள் உண்டாயிருக்கிறது, அவைகளில் ஒன்றும் அர்த்தமில்லாததல்ல." (1கொரி. 14:10).**

நாம் பேசுகிற அந்நிய பாஷைக்கும் அர்த்தமுண்டு. மனிதர்கள் அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள மாட்டார்கள். ஆனால், ஆண்டவர் அதைப் புரிந்து கொள்வார்.

பேசுகிற நாமும், நாம் பேசுகிற அந்நிய பாஷையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியும். இதற்காக நாம் விண்ணப்பம் பண்ண வேண்டும்.

1975ம் ஆண்டு, தஞ்சாவூரில் நடைபெற்ற ஆசீர்வாத முகாமில் (BLESSO), ஆண்டவர் என்னை பரிசுத்த ஆவியினால் அளவில்லாமல் நிரப்பினார். பரிசுத்த ஆவியினால் நிறைந்து, அந்நிய பாஷை களைப் பேசி மகிழ்ந்தேன்.

அதன் பிறகு தினமும் தேவ சமுகத்தில் ஜெபிக்கும் போதெல்லாம், பரிசுத்த ஆவியினால் நிறைந்து, அந்நிய பாஷைகளைப் பேசுவேன். ஆனால், நான் பேசுகிற அந்நிய பாஷையின் அர்த்தம் எனக்குத் தெரியாதிருந்தது. ஆனால்,, அந்நிய பாஷைகளைப் பேசும் போதெல்லாம் கர்த்தருக்குள் பெரிய மன மகிழ்ச்சியும், ஆண்டவர் மீது அளவில்லாத அன்பும் பெருகுவதை உணர்ந்தேன்.

ஒருநாள், நான் வேதத்தைத் தியானித்துக் கொண்டிருந்தபோது, 1 கொரி. 14:13ம் வசனத்தின் மூலம் ஆவியானவர் என்னோடு பேசினார்.

"அந்தப்படி அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம்பண்ணக்கடவன்." என்று.

"நான் பேசுகிற அந்நிய பாஷைக்கு அர்த்தம் உண்டு. அதை அறிந்து கொள்ள ஆண்டவரிடம் விண்ணப்பம் பண்ண வேண்டும்" என்று ஆவியானவர் திருவுளம் பற்றினார். எனக்குள் ஒரு பெரிய ஆசை எழுந்தது. நான் பேசுகிற அந்நிய பாஷைக்கு அர்த்தம் தெரிய வேண்டுமென்று, விருப்பத்தோடு தேவ சமுகத்தில் ஜெபிக்க ஆரம்பித்தேன். ஆவலோடும், விசுவாசத்தோடும் இந்த வேத வசனத்தைச் சொல்லி, ஜெபிக்க ஆரம்பித்தேன்.

நான் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, பரிசுத்த ஆவியானவர் என் மீது இறங்கி வந்தார். நான் ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷைகளைப் பேச ஆரம்பித்தேன். என் உதடுகள் அந்நிய பாஷைகளைப் பேசினது. என் இருதயமோ; அதன் அர்த்தம் தெரிய வேண்டுமென்று தேவனிடத்தில் மன்றாடிற்று.

திடீரென்று, நான் பேசுகிற அந்நிய பாஷைக்கு, என் இருதயத்தில் அர்த்தம் தெரிய ஆரம்பித்தது. முதலில், "இது என் மனப் பிரம்மையாக இருக்குமோ!" என்று

எனக்குள் சந்தேகம் எழும்பிற்று. அப்பொழுது ஆவியானவர், அந்நிய பாஷை மூலம் மறுபடியும் என்னோடு பேசினார். "நீ என் வார்த்தைகளை சந்தேகப்படுகிறதென்ன? நான் உன்னோடு பேசிக் கொண்டிருக்கிறேன்" என்று, ஆவியானவர் என் இருதயத்தில் பேசினபோது, நான் விசுவாசிக்க ஆரம்பித்தேன்.

உடனே, அதுவரை இல்லாத ஒரு சந்தோஷம், என் உள்ளத்தில் நிரப்பினது. அந்த நாள்முதல், என் ஜெப நேரம் இன்னும் வித்தியாசமாக மாறிற்று. இப்பொழுது நான் பரிசுத்த ஆவியினால் நிறைந்து, அந்நிய பாஷைகளைப் பேசும்போது, 'ஆவியானவர் என் மூலமாக என்ன பேசுகிறார்?' என்பதை என் இருதயத்தில் உணர்ந்து கொள்ள முடிகிறது.

சில சமயங்களில், ஆவியானவர் என் மூலம் அந்நிய பாஷையில் தேவனைப் புகழ்ந்து துதிக்கிறதை உணர்கிறேன் (அப். 10:45, 1 கொரி. 14:16), சில சமயங்களில் ஆவியானவர் எனக்காக மன்றாடுவதை உணர்கிறேன் (ரோமர் 8:26), சில சமயங்களில் அந்நிய பாஷையில் பாடி மகிழ்கிறேன் (1 கொரி. 14:15), சில சமயங்களில் மற்றவர்களுக்காகக் கண்ணீரோடு விண்ணப்பம் பண்ணுவதை உணர்கிறேன் (ரோமர் 8:27, 1 கொரி. 14:14)

இப்படி நான் அந்நிய பாஷையில் பேசும்போது, அதன் அர்த்தத்தை விளங்கிக் கொள்கிறபடியினால், அந்த ஜெப நேரம் இனிமையான நேரமாயிருக்கிறது, அர்த்தமுள்ளதாயிருக்கிறது. நீங்களும் இந்த அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். நீங்கள் பேசுகிற அந்நிய பாஷைக்கு அர்த்தத்தை அறிந்து கொள்ளத் தக்கதாக விண்ணப்பம் பண்ணுங்கள். ஆண்டவர், உங்களுக்கும் இந்தக் கிருபையைத் தருவார்.

ஒரு சமயம், ஒரு பட்டணத்திற்கு ஊழியத்திற்காகச் சென்றிருந்தேன். கூட்டம் நடத்துவதற்கு, பலத்த எதிர்ப்பும், பிரச்சனையும் காணப்பட்டது. நான் மிகவும் சோர்ந்து போனேன். இந்தச் சூழ்நிலையில் என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை. ''யார் மூலமாவது கர்த்தர் என்னோடு பேச மாட்டாரா?'' என்று கலங்கினேன். ஒரு வழியும் இல்லாத சூழ்நிலையில் ஜெபிக்க முழங்கால் படியிட்டேன்.

அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் என் மீது இறங்கினார். பரிசுத்த ஆவியினால் நிறைந்து, அந்நிய பாஷைகளைப் பேச ஆரம்பித்தேன். அந்நிய பாஷை மூலமாக ஆவியானவர் என்னோடு பேச ஆரம்பித்தார். ''மகனே, பயப்படாதே! நீ பயப்படுகிறபடி ஒன்றும் நடப்பதில்லை! நான் தடைகளை மாற்றித் தருவேன்! என் ஊழியம் தடைப்படாது! நான் உன்னை இங்கே கொண்டு வந்தேன்! என் வல்லமையை விளங்கப் பண்ணுவேன்!'' என்று பேசினார். என் உள்ளத்திலிருந்த பயம், கலக்கமெல்லாம் மறைந்தது.

அதேபோல் கர்த்தர் எல்லாத் தடைகளையும் மாற்றினார். கூட்டம் ஒரு பிரச்சனை இல்லாமல், ஆசீர்வாதமாய் நடந்தது.

**பாருங்கள்! இந்த இக்கட்டான நேரத்தில், என்னை ஆறுதல்படுத்த யாரும் இல்லாத சூழ்நிலையில், ஆவியானவரே அந்நிய பாஷை மூலம் என்னோடு பேசி, என்னை தைரியப்படுத்தினார்.**

**இந்த அனுபவம் எனக்கு மட்டுமல்ல, ஒவ்வொருவரும் இந்த அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். நீங்களும் இதற்காக ஜெபியுங்கள். கர்த்தர், உங்களுக்கும் இந்தக் கிருபையைத் தருவார்.**

# அந்நிய பாஷையில் மன்றாடும் ஆவியானவர்!

"...ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ளவேண்டியதின்னதென்று அறியாமலிருக் கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்." ரோமர் 8:26.

சில சமயங்களில், பிரச்சனைகள், பாரங்கள் நம்மை நெருக்கும்போது, ஜெபிக்க முடியாதபடி தடுமாறுகிறோம்.

"இந்தக் காரியத்திற்காக எப்படி ஜெபிப்பது?" என்று திகைக்கிறோம். அப்படிப்பட்ட சமயங்களில் ஆவியானவர்தாமே நமக்காக வேண்டுதல் செய்கிறார்.

ஒரு சமயம், எனக்கு வீட்டிலும் பிரச்சனை, ஊழியத்திலும் பிரச்சனை! என் உள்ளத்தை ஒரு பாரம் அழுத்தினது. ஜெபித்துப் பார்க்கிறேன், ஜெபிக்க முடியவில்லை. வேதத்தை வாசித்துப் பார்க்கிறேன், விருப்பமில்லை. "யாராவது வந்து எனக்காக ஜெபிக்க மாட்டார்களா?" என்று எதிர்பார்த்தேன், அன்று யாரும் வரவில்லை!

தனித்து விடப்பட்ட வேதனை, என் உள்ளத்தை அழுத்திற்று. மாலை நேரம் வந்தது. நான் வழக்கமாக ஜெபிக்கச் செல்கிற வனாந்திரத்திற்குப் போனேன். 'என்ன ஜெபிக்க? எப்படி ஜெபிக்க?' என்று ஒன்றுமே விளங்கவில்லை. திடீரென்று ஒரு வல்லமை என் மீது இறங்கிற்று. அந்நிய பாஷையில் பேச ஆரம்பித்தேன். அந்நிய பாஷையில் பேசுகிறேன்... பேசுகிறேன்... பேசிக் கொண்டேயிருக்கிறேன். பல நிமிட நேரம் அந்நிய பாஷைதான் என் வாயில் வந்து கொண்டேயிருந்தது.

திடீரென்று, ஒரு மனிதன் மின்சார வல்லமையில் அகப்பட்டு, விடுதலையாவதைப்போல, அந்த வல்லமையிலிருந்து விடுபட்டதை உணர்ந்தேன். "இந்த அனுபவம் புதிதாக இருக்கிறதே! இது என்ன?" என்ற கேள்வி என் உள்ளத்தில் எழுந்தாலும், என் இருதயத்தின் பாரமெல்லாம் நீங்கி, என் உள்ளத்தில் ஒரு மகிழ்ச்சி வந்திருந்தது. என் இருதயம் இலகுவாய் இருந்ததை உணர்ந்தேன்.

நான் முழங்கால்படியிட்டு, ஆண்டவரிடத்தில் விசாரித்தபோது: "உன் இருதயத்தில் இருந்த துக்கத்தினால் உன்னால் ஜெபிக்க முடியாதபடி பாரம் கொண்டிருந்தாய். ஆவியானவர் உன் மீது இறங்கி, உன் நாவைப் பயன்படுத்தி, உனக்காக வாக்குக்கடங்காத பெருமூச்சோடு பிதாவினிடத்தில் வேண்டுதல் செய்திருக்கிறார்." என்று விளக்கம் கொடுத்தார் **(ரோமர் 8:26).**

ஒரு சமயம், ஒரு குழுவாக நாங்கள் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, ஒரு சகோதரன் ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷைகளைப் பேசினார். அவர் கண்ணீர் விட்டு அழுது கொண்டே, பெரு மூச்சோடு அந்நிய பாஷைகளைப் பேசினார். நான் அவரைக் கவனித்தபோது, பாஷைகளை வியாக்கியானம்

பண்ணுகிற வரம் **(1 கொரி. 12:10)** எனக்குள் கிரியை செய்தபடியினால், அவர் அந்நிய பாஷையில் ஜெபிக்கிறதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஒரு குறிப்பிட்ட பாவத்தை அவரால் விட முடியவில்லை. அதைக் குறித்த வருத்தம் அவருக்கு இருந்தது. அந்தப் பாவத்தை மன்னிக்கும்படியும், அந்த பெலவீனத்திலிருந்து விடுதலை கொடுக்கும்படியும், ஆவியானவர் அவருக்காக பிதாவினிடத்தில் பெருமூச்சுகளோடு மன்றாடி ஜெபிக்கிறதை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது.

**"...ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்." (ரோமர் 8:26) என்பது, எத்தனை நிச்சயமான அனுபவம்!**

**ஆவியானவர் நமக்காக மன்றாடுவது மாத்திரமல்ல, நம் மூலமாக மற்றவர்களுக்காகவும் மன்றாடுகிறார்.**

**"ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிற படியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்."**

**(ரோமர் 8:27)**

ஆவியானவர் மற்றவர்களுக்காக, விசேஷமாக பரிசுத்தவான்களுக்காக, தேவ சித்தத்தின்படி வேண்டுதல் செய்கிறார்.

ஒரு சமயம், அதிகாலை இரண்டு மணிக்கு ஆண்டவர் என்னை எழுப்பி, ஜெபிக்கும்படி தூண்டினார். "நான் என்ன காரியத்திற்காக ஜெபிக்க

வேண்டும், ஆண்டவரே?'' என்று வேண்டுதல் செய்தபோது, ஆவியானவர் ஒரு தேவ மனிதரை என் கண் முன் நிறுத்தி, "இவனுக்காக ஜெபி" என்றார்.

இவர், தன் பிள்ளைகள் காரியமாக ஜெபிக்கும்படி சில நாட்களுக்கு முன்பாக எனக்குக் கடிதம் எழுதி யிருந்தார். "அதற்காக நான் ஜெபிக்க வேண்டுமோ?" என்று நினைத்த மாத்திரத்தில், "அதற்காக அல்ல, அவன் வியாதிப்பட்டு, மரணப் போராட்டத்தில் இருக்கிறான். அவன் விடுதலை பெற ஜெபம் பண்ணு" என்று, ஆவியானவர் தெளிவாகப் பேசினார்.

அவருக்காக நான் ஜெபிக்க ஆரம்பித்தவுடன், பரிசுத்த ஆவியானவர் என்னை ஆட்கொண்டார். நான் ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷையில் ஜெபிக்க ஆரம்பித்தேன். பெருமூச்சு விட்டு, அழுது கொண்டே ஜெபித்தேன். சுமார் அரை மணி நேர ஜெபத்திற்குப் பிறகு, என் உள்ளத்தில் ஒரு சந்தோஷம் வந்தது.

''ஆண்டவர் பதில் கொடுத்து விட்டார்'' என்ற நிச்சயம், என் உள்ளத்தில் வந்தது. "நான் ஜெபித்து விட்டேன்; இனி படுக்கப் போலாமா?" என்றபோது, ஆண்டவர் இன்னொரு ஊழியரை எனக்குக் காண்பித்து, "இவனுக்காக ஜெபம் பண்ணு" என்றார்.

அவர் கர்த்தருக்காக மிகவும் வைராக்கியமுள்ள ஊழியர். ''அவருக்காக என்ன காரியத்திற்காக ஜெபிக்க வேண்டும்?'' என்று வேண்டுதல் செய்தபோது, "பொல்லாத மனிதர்களால் உண்டான போராட்டத்தினால் மிகவும் சோர்ந்து போயிருக்கிறான். உயிருக்கே ஆபத்தான போராட்டத்தில் இருக்கிறான்" என்பதை ஆவியானவர் எனக்குக் காண்பித்தார்.

அவருக்காக நான் ஜெபிக்க ஆரம்பித்ததும், ஆவியானவர் என்னை ஆட்கொண்டு, மன்றாடி ஜெபிக்க ஆரம்பித்தார். அந்நிய பாஷையில் சுமார்

அரைமணி நேரம் நான் ஜெபித்துக் கொண்டிருந்தேன். அவருக்காக ஆவியானவர் போராடி, மன்றாடி, ஜெபிக்கிறதை என்னால் உணர முடிந்தது.

என் ஆவியில் ஒரு மகிழ்ச்சி வரும்வரை ஜெபித்துக் கொண்டிருந்தேன். அந்த ஊழியருக்காகக் கர்த்தர் ஒரு வாக்குத்தத்தம் கொடுத்து, வெற்றியை உறுதிப்படுத்தினார்.

''ஆண்டவரே, நீர் சொன்ன பரிசுத்தவான்களுக்காக ஜெபித்து விட்டேன். இனி தூங்கச் செல்லலாமா?" என்று நான் கேட்டபோது, "இல்லை, இன்னொருவருக்காகவும் நீ ஜெபிக்க வேண்டும்" என்று, இன்னாருவரைக் குறித்து என்னோடு ஆண்டவர் பேசினார்.

அவருக்காகவும் பரிசுத்த ஆவிக்குள் நிரம்பி, அந்நிய பாஷையில் ஜெபிக்க ஆரம்பித்தேன். பதில் பெற்று விட்ட நிச்சயம் வரும்வரை ஆவியானவர் ஜெபத்தில் உதவி செய்தார்.

இந்த மூன்று பேருக்காகவும் நான் ஜெபித்து முடித்தபோது, அதிகாலை நான்கு மணி ஆகியிருந்தது. "இப்பொழுது நீ ஓய்வெடுக்கச் செல்லலாம்" என்று ஆண்டவர் என்னை நடத்தினார்.

அடுத்த நாள் காலை நான் எழுந்ததும், அந்த மூன்று பேருக்கும், நான் ஜெபித்த காரியத்தைக் கடிதத்தில் எழுதினேன். மூன்று பேரிடம் இருந்தும் உடனே எனக்குப் பதில் கடிதம் வந்தது.

முதலாவது சகோதரர், "சில நாட்களாக சரீரம் பாதிக்கப்பட்டு, இரவும், பகலும் தூக்கமில்லாமல் ஒரு மரணப் போராட்டத்தில் இருந்து, நீங்கள் எனக்காக ஜெபித்த அதே அதிகாலை நேரத்தில், ஆண்டவர் என் சரீரத்தில் அற்புத சுகம் கொடுத்தார். அதன் பிறகுதான் என்னால் தூங்க முடிந்தது!" என்று கடிதம் எழுதியிருந்

தார்கள். இரண்டாவது ஊழியர், ''நீங்கள் குறிப்பிட்டிருந்தபடியே, மனிதர்களால் உண்டான போராட்டத்தினால் மரண பயத்தோடு கலங்கிக் கொண்டிருந்தேன். நீங்கள் ஜெபித்த அன்றிலிருந்து சூழ்நிலையைக் கர்த்தர் மாற்றி விட்டார்'' என்று மகிழ்ச்சியோடு எழுதியிருந்தார்.

மூன்றாவது நபரிடமிருந்தும் மகிழ்ச்சியான பதில் வந்தது.

இதுபோல பல சமயங்களிலும், பலருக்காகவும் மன்றாடி ஜெபிக்க ஆவியானவர் என்னை நடத்தியிருக்கிறார், நடத்திக் கொண்டிருக்கிறார்.

இதைக் குறித்துத்தான்,

**"எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்." (எபேசியர் 6:18)** என்று வசனம் சொல்கிறது.

**"சகல பரிசுத்தவான்களுக்காகவும் ஆவியினாலே ஜெபம் பண்ண வேண்டும்" (PRAY IN THE SPIRIT)** என்று இந்த வசனம் கூறுகிறது. "ஆவியினாலே ஜெபம் பண்ணுவது" என்பது, "அந்நிய பாஷையிலே ஜெபம் பண்ணுவது" என்று, தன் அனுபவத்தோடு பரி.பவுல் எழுதியிருக்கிறார் **(1 கொரி. 14:14).**

**"...நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம்பண்ணுமே யன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும்."**

**1 கொரி. 14:14.**

அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணுகிற அனுபவம், பவுல் அப்போஸ்தலனுக்கு இருந்தது. நாமும் ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷையில்

விண்ணப்பம் பண்ணலாம்! அதாவது, பரிசுத்த ஆவி யானவர், நம் ஆவியோடு இடைபட்டு, நம் நாவைப் பயன்படுத்தி, அந்நிய பாஷையில் ஜெபிப்பது. இதைத்தான், 'ஆவியிலே ஜெபிக்கிற அனுபவம்' என்று பவுல் குறிப்பிடுகிறார்.

எப்பொழுதுமே நாம் அந்நிய பாஷையில் ஜெபித்துக் கொண்டிருக்க முடியாது, ஆகவேதான், **"...நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்..." (1 கொரி. 14:15)** என்று, பவுல் தன் அனுபவத்தைச் சொல்கிறார்.

**நாமும் இப்படி ஜெபிக்க வேண்டும்** என்று ஆண்டவர் விரும்புகிறார். ஆகவேதான் ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷையில் பேசுகிற அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இது வேத வசனத்தோடு கூடிய நம்முடைய அனுபவம்.

சிலர் இந்த ஆவிக்குரிய அனுபவங்களை அறியாதபடியினால், "அந்நிய பாஷைகளைப் பேசுவது அவசியமல்ல" என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

மனிதர்களுடைய வார்த்தைகளுக்குச் செவி கொடாமல், வேத வசனங்களை பரிசுத்த ஆவியான வரின் உதவியோடு ஆராய்ந்து பாருங்கள். ஆவியான வர் சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்.

# அந்நிய பாஷையும், தீர்க்கதரிசனமும்!

**"அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்தி விருத்தி உண்டாகப் பேசுகிறான்; தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகப்பேசுகிறான்;...ஆதலால் நீங்கள் தீர்க்க தரிசனஞ்சொல்லுகிறவர்களாகவேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன்" (1 கொரி. 14:4,5)** என்று பவுல் அப்போஸ்தலன், ஆண்டவரின் விருப்பத்தை எழுதுகிறார்.

அந்நிய பாஷை பேசுகிறவர்களை தீர்க்கதரிசனம் சொல்கிறவர்களாகவும் கர்த்தர் பயன்படுத்துகிறார். இதில் இரண்டு அனுபவங்கள் உண்டு.

ஒன்று, **அந்நிய பாஷை பேசுகிறவர்களே, அந்நிய பாஷை பேசி, தீர்க்கதரிசனம் சொல்வதுண்டு.**

எபேசு பட்டணத்தில் விசுவாசிகளை பவுல் சந்தித்தபோது, பரிசுத்த ஆவியானவரைக் குறித்து அவர்களுக்குச் சொல்லி; **"...பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தஆவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்." (அப். 19:6)**

மற்றொன்று, **ஒருவர் அந்நிய பாஷைகளைப் பேசும்போது, மற்றொருவர் அதன் அர்த்தத்தைச் சொல்வது.**

பல ஆண்டுகளுக்கு முன்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு கிராமத்திற்கு ஊழியத்திற்காகச் சென்றிருந்தேன். அந்த ஊரில் ஆலயம் கிடையாது. ஒரு ஸ்கூல் கட்டிடத்தில்தான் (C.S.I) ஆராதனை நடைபெற்றது.

ஒருநாள் இரவு, கூட்டம் முடிந்ததும், ஜெபம் பண்ணுவதற்கு அந்த ஸ்கூல் கட்டிடத்தில் கூடினோம். அந்த இடம் நிரம்பத் தக்கதாக ஜனங்கள் கூடி விட்டார்கள்.

அந்தக் கிராமத்தில் ஆலயம் கட்ட வேண்டும் என்று, அந்த மக்களுக்கு அதிக விருப்பம். நாங்கள் கூடி, தேவனைத் துதித்து, ஜெபித்துக் கொண்டிருக்கும்போது திடீரென்று ஆவியானவர் சொன்னார்: “யாவரையும் அமைதியாக இருக்கச் சொல், நான் பேச வேண்டும்” என்றார். யாரைக் கொண்டு? எப்படிப் பேசுவார்? என்று எனக்குத் தெரியாது.

ஆவியானவர் சொன்னபடியினால், “யாவரும் அமைதியாயிருங்கள், கர்த்தர் பேசப் போகிறார்” என்றேன். யாவரும் அமைதியானார்கள்.

அப்பொழுது, ஒரு தாயார் மீது பரிசுத்த ஆவியான வர் இறங்கினார். அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசி, தீர்க்கதரிசனம் சொன்னார்கள். அந்த சபையிலுள்ள பாவங்களைக் குறித்தும், 'மனந்திரும்ப வேண்டும்' என்றும் பேசினார்கள்.

உடனே யாவருக்குள்ளும் பாவ உணர்வு உண்டா யிற்று. சபை ஊழியர், சபை கமிட்டி அங்கத்தினர்கள், பெரியவர்கள், சிறியவர்கள் எல்லோரும் கண்ணீர்

விட்டு அழுதார்கள். அந்த அழுகையின் சத்தத்தைக் கேட்டு, ஊரே திரண்டு வந்து விட்டது. சுமார் அரை மணி நேரம் கழிந்தது. ஆவியானவர் சொன்னார்: "யாவரையும் அமைதியாயிருக்கச் சொல். நான் மறுபடியும் பேச விரும்புகிறேன்" என்றார்.

யாவரும் அமைதியானவுடன், மற்றொரு சகோதரி மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசி, தீர்க்கதரிசனம் சொன்னார்கள்: "உங்களுக்கு இரங்கினேன், உங்கள் விருப்பத்தின்படி ஆலயத்தைக் கட்டித் தருவேன்" என்று வாக்குக் கொடுத்தார். பாருங்கள், ஆவியானவர் பேசினபடியே அந்தக் கிராமத்தில் உடனே ஆலயம் கட்ட கர்த்தர் வழிகளைத் திறந்தார்.

சில மாதங்கள் கழித்து, அந்த சபைப் பெரியவர்கள் என்னைப் பார்க்க வந்தார்கள். "அன்று ஆண்டவர் சொன்னபடி ஆலயம் கட்டப்பட்டு விட்டது. நீங்கள் எங்கள் ஊருக்கு வர வேண்டும்" என்று அழைக்க வந்தார்கள்.

**ஆதித் திருச்சபையில் மாத்திரமல்ல, இன்றும் ஆவியானவர் சபைகளில் அருமையாய் கிரியை செய்கிறார். நாம் அவருக்கு இடம் கொடுத்தால், அவர் நம் வாழ்விலும் அற்புதமாகக் கிரியை செய்வார்.**

மற்றொரு சமயம், ஒரு முழு இரவு ஜெபத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு ஜெப நேரத்தில் எல்லோரும் ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷைகளைப் பேசிக் கொண்டிருந்தபோது, ஒரு சகோதரன் மாத்திரம் மிகவும் சத்தமாக அந்நிய பாஷைகளைப் பேசினார்.

அப்போது ஜெபத்தை நடத்தின சகோதரர், மற்றவர்களை அமைதியாய் ஜெபிக்கக் கேட்டுக் கொண்டார். அங்கிருந்த இன்னொரு சகோதரன் மீது ஆவியானவர் இறங்கினார்.

முந்திய சகோதரன் பேசின அந்நிய பாஷைக்கு இவர் அர்த்தம் சொல்ல ஆரம்பித்தார். அவர் அந்நிய பாஷை பேச, இவர் அர்த்தம் சொல்ல, அதன் மூலம் ஆவியானவர், வந்திருந்த ஒவ்வொருவரோடும் பேசினார். சில நிமிடங்கள் கழித்து, மற்றொரு சகோதரி அந்நிய பாஷையில் சத்தமாய் பேச ஆரம்பித்தார்கள். உடனே முந்திய சகோதரன் அமைதியாகி விட்டார்.

அப்பொழுது, மற்றொரு சகோதரன், அந்த அந்நிய பாஷைக்கு அர்த்தம் சொல்ல ஆரம்பித்தார். வந்திருந்த யாவரும் இதன் மூலம் ஆறுதலும், பக்தி விருத்தியும் அடைந்தார்கள்.

இதைக் குறித்துத்தான் பரிசுத்த பவுல், **"யாராவது அந்நியபாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டுபேர்மட்டில், அல்லது மிஞ்சினால் மூன்று பேர்மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும். அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்." (1 கொரி. 14:27,28) என்று** சொல்கிறார்.

'சபையில் அந்நிய பாஷையில் பேசக் கூடாது' என்று பவுல் கூறவில்லை; அந்நிய பாஷைக்கு அர்த்தம் சொல்கிற, அதாவது **பாஷைகளை வியாக்கியானம் பண்ணுகிற வரம் பெற்றவர்கள்** சபையில் இருந்தால் சபையில் பேசலாம் **(1 கொரி. 12:10)** என்றுதான் சொல்கிறார்.

அர்த்தம் சொல்கிறவர்கள் இல்லாவிட்டால், சபையில் சத்தமாக அந்நிய பாஷைகளைப் பேசி, மற்றவர்களுக்கு இடைஞ்சல் உண்டாக்காமல், **உங்களுக்கும், தேவனுக்கும் தெரிய அமைதியாக அந்நிய பாஷைகளைப் பேசலாம் (1கொரி. 14:28).**

சபையில் கூடி வரும்போது, இந்த ஒழுங்குகளைப் பின்பற்ற வேண்டும். மற்றபடி தனித்து நீங்கள் ஜெபிக்கும்போது, அது ஆண்டவருக்கும், உங்களுக் கும் உள்ள காரியம். நீங்கள் ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷையில் பேசலாம், பாடலாம், துதிக்கலாம், ஆண்டவர் அதை விளங்கிக் கொள்வார்.

ஆகவே, இந்த ஆவிக்குரிய அனுபவங்களை நாடுங்கள். அதைக் குறித்து வேதத்தில் வாசித்து, தியானியுங்கள் **(1 கொரி. 12, 14 அதிகாரங்கள்).** ஆவிக்குரிய அனுபவங்களில் தேறும்படி நாடுங்கள் **(1 கொரி. 14:12).**

**"இப்படியிருக்க, சகோதரரே, தீர்க்கதரிசனஞ் சொல்ல நாடுங்கள், அந்நிய பாஷைகளைப் பேசுகிற தற்கும் தடைபண்ணாதிருங்கள். சகலமும் நல் லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது."**

**(1 கொரி. 14:39,40)**

"அந்நிய பாஷை பேசுகிறதற்குத் தடை பண்ணா திருங்கள்" என்பது, தேவனுடைய வார்த்தை. அந்நிய பாஷைக்கு விரோதமாய் பேசுகிறவர்கள்; தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாய் பேசுகிறவர்கள்!

அப்படிப்பட்ட வார்த்தைகளுக்குச் செவி கொடாமல், வேத வசனங்களை திறந்த மனதோடு ஆராய்ந்து, சத்தியத்தை அறிந்து கொள்ளுங்கள். சில ஆவிக்குரிய அனுபவங்களை உங்களால் புரிந்து கொள்ள முடியா விட்டால், அமைதியாக, அதை விட்டு விடுங்கள்.

அந்த ஆவிக்குரிய அனுபவங்களுக்கு விரோத மாய் பேசாதிருங்கள். ஆவியானவரின் கிரியைகளை யாரும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் கட்டுப்படுத்தி விட முடியாது.

பவுல் அப்போஸ்தலனுடைய ஆவிக்குரிய சில காரியங்களை எல்லோராலும் விளங்கிக் கொள்ள

முடியவில்லை. சிலர் அதற்கு எதிராகப் பேசினபடியால், இயேசுவின் சீஷனாகிய பரி. பேதுரு அதைக் குறித்து இப்படி எழுதியிருக்கிறார் பாருங்கள்:

**"...நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்; எல்லா நிருபங்களிலும் இவைகளைக் குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேத வாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடுவரத் தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்.**

**ஆதலால் பிரியமானவர்களே, இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்துபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து,**

**நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின்கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்." (2 பேதுரு 3:15-18).**

பாருங்கள்! பவுல் அப்போஸ்தலன் சொன்ன சில ஆவிக்குரிய காரியங்கள், பேதுரு அப்போஸ்தலனுக்கு அறிகிறதற்கு அரிதாயிருந்ததாம்! என்றாலும், அவர் அந்த ஆவிக்குரிய காரியங்களுக்கு விரோதமாகப் பேசவுமில்லை, எழுதவுமில்லை.

நமக்கு எச்சரிப்பு உண்டாகத்தான் ஆவியானவர் இதை வேதத்தில் எழுதி வைத்திருக்கிறார்.

அநேக ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு சகோதரி, வியாதிப்பட்ட தன் கணவருக்காக ஜெபிக்க, அவரை என்னிடத்தில் அழைத்து வந்தார்கள். அவர் எலும்பும், தோலுமாக இருந்தார். இழுப்பு வியாதியினால் பாதிக்கப்பட்டு, பேசக்கூட முடியாமல், மூச்சு விட

முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அவருடைய வேதனையைப் பார்த்து எனக்கு மிகவும் பாரம் உண்டாயிற்று.

அவருடைய சுகத்திற்காக பாரத்தோடு ஜெபிக்க ஆரம்பித்தபோது, ஆவியானவர் என்னைத் தடுத்து நிறுத்தினார். "அவன் செய்த பாவத்தினிமித்தம் இந்த வேதனைகளை அனுபவிக்கிறான். அவனுக்காகப் பரிந்து பேசாதே" என்று ஆவியானவர் திருவுளம் பற்றினார். ''எந்தப் பாவத்தையும் மன்னிக்கிற இரக்கமுள்ள தகப்பனல்லவா நீர்! இவரை மன்னித்து, சுகமாக்கும்!" என்று மன்றாட ஆரம்பித்தேன்.

''மன்னிக்கவே முடியாத பாவத்தை இவன் செய்திருக்கிறான். விட்டுவிடு'' என்று ஆண்டவர் சொன்னபோது, என் உள்ளம் அதிர்ச்சி அடைந்தது, ''இயேசுவால் மன்னிக்க முடியாத ஒரு பாவம் உண்டா?'' என்று, என் உள்ளத்தில் கேள்வி எழும்பினபோது, ஆவியானவர், **மாற்கு 3:28,29** வசனங்களை என் கண் முன் நிறுத்தினார். அதை எடுத்து வாசித்தேன்.

**''மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: மனுஷர்கள் செய்யும் எல்லாப் பாவங்களும், அவர்கள் தூஷிக்கும் எந்தத் தூஷணங்களும், அவர்களுக்கு மன்னிக்கப்படும்;**

**ஒருவன் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகத் தூஷணஞ்சொல்வானாகில், அவன் என்றென்றைக்கும் மன்னிப்படையாமல் நித்திய ஆக்கினைக்குள்ளாயிருப்பான் என்றார்." (மாற்கு 3:28,29)** என்று, இயேசுவே சொல்லியிருக்கிறார்.

இந்த வசனத்தின் மூலம், 'இந்த சகோதரர் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் பேசியிருக்கிறார்' என்பதை அறிந்து கொண்டேன். "நீங்கள் எப்போதாவது பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் பேசினதுண்டா?'' என்று

அவரிடம் கேட்டபோது, அவர் ஆச்சரியத்தோடு என்னைப் பார்த்தார்.

உடனே, அவருடைய மனைவி, “நான் எத்தனை முறையோ சொன்னேன்; கேட்கவில்லை. இவர் ஒரு சபையில் ஊழியராக (உபதேசியாராக) பணி செய்கிறார். ஆலயத்தில் பிரசங்கிக்கையில் அந்நிய பாஷையை பரியாசமாகப் பேசி, கிண்டல் செய்வார். அந்நிய பாஷையில் பேசுகிறவர்களைப் பரியாசம் பண்ணி, பிரசங்கம் பண்ணுவார். ஆண்டவருக்கு விரோதமான இந்தப் பாவத்தைச் செய்யாதிருங்கள்" என்று, நான் பல முறை சொல்லியும், இவர் கேட்கவில்லை!" என்று வருத்தத்தோடே சொன்னார்கள்.

“ஆவியானவருக்கு விரோதமாய் பேசி, மன்னிக்க முடியாத பாவத்தைச் செய்து விட்டீர்கள், இதில் ஊழியனாகிய நான் ஒன்றும் செய்ய முடியாது!" என்று சொல்லி, அவரை வேதனையோடு அனுப்பினேன். அவரும் வருத்தத்தோடே சென்றார். சீக்கிரத்திலே மரணம் அடைந்து விட்டார்.

தயவு செய்து ஆவியானவருக்கு விரோதமாக, தூஷணங்களைப் பேசாதிருங்கள். **உங்களால் ஆவிக்குரிய சில அனுபவங்களைப் புரிந்து கொள்ள முடியா விட்டால், அமைதியாகி விடுங்கள்.** உங்களுக்கே கேடு வரத்தக்கதாக ஆக்கினைகளைத் தேடிக் கொள்ளாதீர்கள். நீங்கள் சொல்கிற விளக்கங்கள், உங்களுக்குச் சரியாக இருக்கலாம்! ஆனால், அதுவே சில வேளைகளில் தேவனுடைய பார்வையில் குற்றமாயிருக்கலாம்!

மிரியாம், தேவ மனிதனாகிய மோசேக்கு விரோதமாய் பேசினபோது, அவளுக்கும், ஆரோனுக்கும் அவர்கள் பார்வையில் அது சரியாகத்தான் தெரிந்தது. ஆனால், கர்த்தருக்கு அது கோபத்தை உண்டாக்கிற்று. மிரியாம் தனக்கே கேட்டை வருவித்துக் கொண்டாள்

(எண். 12:1-10). ஆகவே, வீண் வாக்குவாதம் பண்ணுவதை விட்டு விட்டு, வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஆவிக்குரிய அனுபவங்களை நாம் நாட வேண்டும். ஆவிக்குரிய கிருபைகளையும், வல்லமைகளையும் பெற்று, ஆண்டவருக்குச் சாட்சியாக மாற வேண்டும்.

**மெர்லின் கரோதர்** என்கிற ஒரு தேவ மனிதர், இராணுவத்தில் போதகராகப் பணி செய்து கொண்டிருந்தார். "இரட்சிப்பின் அனுபவம் பெற்று, ஊழியம் செய்த இந்தப் போதகர், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றுக் கொண்டால், இன்னும் வல்லமையோடு ஊழியம் செய்யலாமே" என்று சில விசுவாசிகள் வாஞ்சித்தார்கள்.

அவரை ஒரு ஆவிக்குரிய முகாமிற்குச் செல்லும்படி அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். தன் சபையின் தேவப் பிள்ளைகள் சொல்கிறார்களே என்று, அவர் தன் நண்பரையும் அழைத்துக் கொண்டு, அந்த முகாமிற்குச் சென்றார். அங்கு கூடி வந்திருந்த தேவப் பிள்ளைகள் பரிசுத்த ஆவியினால் நிறைந்து, அந்நிய பாஷைகளைப் பேசுவதையெல்லாம் பார்த்தபோது, அவருக்கு அது விகற்பமாகத் தெரிந்தது.

ஒருநாள் அந்தக் கூட்டங்களை நடத்துகிற தாயாரை அவர்கள் தனித்து சந்தித்தார்கள்.

அவர்கள், இவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளைச் சொல்லி, அவர்கள் இருவர் மேலும் கை வைத்து அபிஷேகத்திற்காக ஜெபித்தார்கள். சில நிமிடங்கள் ஜெபித்து விட்டு, "ஏதாவது மாற்றம் தெரிகிறதா?" என்று கேட்டார்கள்.

அதற்கு மெர்லின் கரோதர், "என் உள்ளத்தின் ஆழத்தில் எனக்குத் தெரியாத பாஷையை யாரோ பேசுவதைப் போல் உணர்கிறேன்" என்றார்.

"ஆவியானவர் உங்களுக்குள் வந்து விட்டார். இப்பொழுது வாய் திறந்து பேசத் தொடங்குங்கள்." **(அப். 2:4)** என்றபோது, "நான் இருக்கிற சபையில், இந்தப் பரிசுத்த ஆவியானவரின் நிறைவு, அந்நிய பாஷைகளையெல்லாம் நம்ப மாட்டார்கள். நான் அந்நிய பாஷைகளைப் பேசினால், என்னைத் தவறாகப் பேசுவார்கள்" என்றார்.

''மற்றவர்கள் உங்களைப் பரிகாசமாய் பேசுவார்கள் என்பதற்காக, ஆண்டவர் தருகிற இந்த விலையேறப் பெற்ற பொக்கிஷத்தை நீங்கள் இழக்கப் போகிறீர்களா?" என்று அந்தத் தாயார் கேட்டபோது, "யார் என்ன சொன்னால் என்ன? எனக்கு இந்த ஆசீர்வாதம் வேண்டும். நான் அதை இழக்க விரும்பவில்லை" என்று சொல்லி, ஆவியானவருக்கு இடம் கொடுத்தார். உடனே ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷையில் பேச ஆரம்பித்தார்.

பல நிமிடங்கள் அந்நிய பாஷை பேசிப் பேசி களைப்படைந்தவரானார். இருவரும் தாங்கள் தங்கியிருந்த அறைக்கு வந்தார்கள். சரீரம் களைப்படைந்திருந்தாலும், தூங்க மனம் வரவில்லை.

பரிசுத்த ஆவியினால் உண்டான சந்தோஷம்! இருவரும் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தார்கள். ''இன்னும் கொஞ்ச நேரம் ஜெபிக்கலாமா?'' என்றார்கள். இருவரும் பல மணி நேரங்கள் ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷைகளைப் பேசி மகிழ்ந்தார்கள். இந்த அனுபவத்திற்குப் பிறகு, அவருடைய ஊழியமே வித்தியாசமாக மாறிற்று. திரளான மக்களுக்கு ஆசீர்வாதமாக மாறினார்.

**பாருங்கள்! இந்த ஆவிக்குரிய கிருபைகளைப் பெற்றுக் கொள்வது, கடினமாக காரியமே அல்ல! நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ள விரும்புவதைக் காட்டிலும், ஆண்டவர் அதை உங்களுக்குக் கொடுக்க**

**அதிக விருப்பமுள்ளவராயிருக்கிறார். நீங்கள்** விசுவாசித்துக் கேட்டால் போதும், **கட்டாயம் உங்களுக்கு இந்த அனுபவத்தைக் கர்த்தர் தருவார்.**

சிலர் வந்து, "நான் அந்நிய பாஷை பேச வேண்டும், அதற்காக் ஜெபியுங்கள்" என்று கேட்பார்கள். உங்களுக்கு முதலாவது தேவை, அந்நிய பாஷையல்ல. **முதலாவது, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வேண்டும். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு விட்டால், அந்நிய பாஷை தானாக வந்து விடும்.** நாமாக அந்நிய பாஷை பேசுவதல்ல. ஆவியானவரால் நிரப்பப்படும்போது, **ஆவியானவர் மூலம் நாம் பேசுகிற பரலோக பாஷைதான் அந்நிய பாஷை.**

வெறுமனே அந்நிய பாஷைகளைப் பேச முயற்சிக்காதீர்கள். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட இடங்கொடுங்கள். ஆவியானவர் உங்களை நிரப்பும்போது, ஆவியானவரே உங்கள் நாவைப் பயன்படுத்தி, அந்நிய பாஷையில் பேசுவார்.

இந்த அனுபவத்தில் வளர வளர, வெளியில் தெரியாமலே உங்கள் இருதயத்தில் ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷையில் பேசிக் கொண்டேயிருக்கலாம். அருகில் இருக்கிற மக்களுக்குத் தெரியாமலேயே, உங்கள் இருதயத்தில் அந்நிய பாஷைகளைப் பேசலாம். இந்த அனுபவத்திற்குள் நீங்கள் வந்து விட்டால், உங்கள் இருதயத்தில் நீங்கள் எப்பொழுதும் கர்த்தரோடு ஐக்கியப்பட்டுக் கொண்டிருக்கலாம்.

ஜெப அறையில் ஜெபிக்கும்போது மாத்திரமல்ல, பிரயாணத்தில் இருக்கும்போதும், வேலைகளைச் செய்து கொண்டிருக்கும்போதும் ஆவியில் நிரம்பி, இருதயத்தில் கர்த்தரோடு பேசிக் கொண்டிருக்கலாம்!

இப்படிப்பட்ட அருமையான, மகிமையான இந்த அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். இன்று

நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்! இப்பொழுது பெற்றுக் கொள்ளலாம்! இருக்கிற இடத்திலேயே பெற்றுக் கொள்ளலாம்!

இந்தச் செய்தியை வாசிக்கிற நீங்கள் எல்லோரும் அந்நிய பாஷைகளைப் பேசும்படி, கர்த்தர் விரும்புகிறார். தேவ ஊழியக்காரனாகிய நானும் விரும்புகிறேன். நீங்களும் விருப்பத்தோடு இந்த ஜெபத்தை ஏறெடுங்கள் :



அபிஷேக நாதரே,

உமக்கு ஸ்தோத்திரம்! தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவருக்காக, ஸ்தோத்திரம்!

ஆவியானவர் அருளும் அந்நிய பாஷைகளுக்காக, ஸ்தோத்திரம்! இந்தச் செய்தியின் மூலமாக என்னோடு பேசினதற்காக, உமக்கு ஸ்தோத்திரம்!

ஆண்டவரே, நானும் அந்நிய பாஷைகளைப் பேச விரும்புகிறேன்! என்னை உம்முடைய பரிசுத்த ஆவியினால் நிரப்பும்! அந்நிய பாஷையில் பேசுகிற கிருபையைத் தாரும்!

எனக்கு நீர் கொடுத்த அபிஷேகத்திற்காக, உமக்கு ஸ்தோத்திரம்! அந்நிய பாஷையில் பேசுகிற கிருபைக்காக, உமக்கு ஸ்தோத்திரம்!

நான் பேசுகிற அந்நிய பாஷையின் அர்த்தத்தை நான் அறிந்து கொள்ள கிருபை தாரும்! பரிசுத்த ஆவிக்குள்ளே பெலன் கொள்ளவும், எப்போதும் பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தில் களிகூரவும் கிருபை தாரும்!

நீர் கொடுத்த இந்த கிருபையின் ஆசீர்வாதங்களுக்காக, உமக்கு ஸ்தோத்திரம்!

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்,

ஆமென்! ஆமென்!




## உபவாச ஜெபம்!

ஒவ்வொரு வியாழக்கிழமையும்
மதியம் 11:00 மணிமுதல்,
மாலை 3:00 மணிவரை
நடைபெறுகிறது.



## முழு இரவு ஜெபம்!

பிரதி மாதம் இரண்டாவது
சனிக்கிழமை இரவு 9:00
மணிமுதல், அதிகாலை 5:00
மணிவரை நடைபெறுகிறது.

## திறப்பின் வாசல் ஜெபம்!

ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமையன்று
காலை 9:00 மணிமுதல், மாலை 3:00
மணிவரை நடைபெறுகிறது.

---

ஆயிரக்கணக்கான மக்கள் இக்கூட்டங்களில் கலந்து கொண்டு,
நம் தேசத்தின் ஆசீர்வாதங்களுக்காக ஜெபித்து வருகிறார்கள்.
நீங்களும் இந்த ஜெபங்களில் கலந்து கொண்டு,
தேசத்திற்காக ஜெபித்து, இயேசு கிறிஸ்துவிடமிருந்து
அற்புதங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
இதில் கலந்து கொள்ள முடியாதவர்கள்,
கீழ்கண்ட முகவரியில் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்,
உங்களுக்காக ஜெபிப்போம்.

---

## ஜாமக்காரன் ஜெபம்!

தினந்தோறும் காலை 10:00 மணிமுதல், மாலை 3:00
மணிவரை தேசத்திற்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டு வருகிறது.
இந்த ஜெபத்திற்கு தனியாகவோ, அல்லது குழுவாகவோ
நாலுமாவடி-தேவனுடைய வீட்டிற்கு வந்து ஜெபிக்க,
உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

---

**இயேசு விடுவிக்கிறார்,**
*நாலுமாவடி - 628 211,*
*தூத்துக்குடி மாவட்டம்,*
*தமிழ்நாடு, இந்தியா*

JESUS REDEEMS MINISTRIES

Ph : (04639) - 235 305, 235 705
Fax : (04639) - 235 415
Email : info@jesusredeems.com
Visit: http://www.jesusredeems.com

24 மணி நேர ஜெப உதவிக்கு : 04639 - 235 315